அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ணிய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் II.] MARCH, 1902-ௗு மார்ச்சு. [இலக்கம். 1.

மனிதருக்கும் மற்ற ஜந்துக்களுக்குமுள்ள வித்தியாஸம்.

ஆழ்ந்துபார்க்குமளவில், மனிதருக்கும் மற்றப் பிராணிகளுக்கும் வித்தியாஸம் அத்தனை யதிகமில்லையென்றும், ஏதோ சொற்பமிருந்தாலும், அவை நம்முடன் சம்பந்தப்பட்டவையே யல்லவென்று சொல்லும்படி அவ்வளவு அதிகமில்லையென்றும் நன்றாக விளங்கும். நாய்களை வளர்த்து அவற்றுடன் பழகி அவற்றின் விசுவாஸத்தையும் நம்பிக்கையையுங் கண்டறிந்தவர்களுக்கு இவ்விஷயம் இன்னும் நன்றாய்த் தெளிவாகும். உண்மையில் வாயில்லா ஜந்துக்களுக்குள்ள வித்தியாஸ மென்னவென்றால், அவை செய்யும் செய்கைகளெல்லாம் முற்றும் சரியானவையேயென்று சொல்லும்படி, அவ்வளவு நன்றாக நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவு அவைகளுக்கில்லையென்ப தொன்றுதான். உண்மையாக யோசித்தால், நாய், மற்றப் பிராணிகளுக்கும் நமக்கும் நடுத்தரமான நிலையிலிருக்கின்றது; வாயில்லா ஜந்துக்களுக்கும் மனிதருக்கும் ஒப்புமை உள்ளதென்று நமக்குத் தெரிவித்து, அவைகளிடத்தில் நாம் ஜீவகாருணியத்துடன் நேசம்பாராட்டி நடந்துகொள்ள வேண்டுமென்று நமக்குப் போதிக்கின்றது. வாஸ்தவத்தில், மனிதருக்குள்ள இரக்கமென்கிற குணமொன்றுதான் வாயில்லா ஜந்துக்களுக்கு இல்லாமலிருக்கின்றது. அந்த ஒரு குணத்தினாலேயே நாம் அவைகளைப்பார்க்கிலும் மேன்மைபெற்றவர்களாயிருக்கின்றோம். நாம் அதை மறந்து அந்த எளிய ஜந்துக்களிடத்தில் இரக்கமற்றவர்களாயிருக்கத் தலைப்படுவோமானால், நாமும் அந்தப் பசு பக்ஷி மிருகாதிகளுக்குச் சமமாகிவிடுவோமென்பது மாத்திரமேயன்று; அவற்றினும் ஈனமான ஸ்திதியை அடைந்தவர்களாவோம்.

கடவுளது சிருஷ்டியில் உணர்ச்சியுள்ள ஜீவன்கள் எவையோ, அவை யெல்லாவற்றிற்கும் அன்பு பாராட்டும் குணம் அளிக்கப்பட்டிருக்கின்றதாயினும், அந்த அன்பு மற்றொன்றினுடைய துயரத்தைக் கண்டு உள்ளமுருகும்படி அவ்வளவு அதிகமாக அமைக்கப்படவில்லை. அப்படியிருந்தாலும், இரக்கமென்கிற குணத்தை நாய் கண்டறிந்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது; நாய்க்கு எங்கேயாவது காயம்பட்டால், அது உடனே அந்தப் புண்ணை யாற்றித் தனக்கு உபசாரம் செய்யும் மனிதரிடம் போய்ச் சேருகிறதல்லவா? அப்படிப்பட்ட ஜீவனைத் துன்புறுத்துகிறவர்கள் கடுநெஞ்சினரென்று சொல்லத் தடையுண்டோ? அவர்களைக் காட்டு மிருகங்களினும் கேடுகெட்ட மிருகங்களென்றல்லவோ சொல்லவேண்டும்!

இவைகளையெல்லாம் ஆலோசிக்கையில், வாயில்லா ஜந்துக்சள் நாம் ஆதரித்துப் போஷிக்கத் தகுந்த பாத்தியதை யுடையவையென நன்றாக விளங்குகிறதல்லவா? அப்படி நமது அன்புக்கு இடமான எளிய ஜந்துக்களைக் கொன்றோ நமது தூராக்குழியை நாம் தூர்க்க முயல்வது? நமது அருமைப் பிராணிகளான ஆடு மாடு முதலியவைகளை விற்பனைக்காகச் சந்தைக்களத்திற்கும், அங்கிருந்து கொலைக்களத்திற்கும் அடித்து ஓட்டிப் படாத பாடுகளெல்லாம்படுத்தி வதைத்து அவற்றின் ஊனைத் தின்று வயிறு வளர்த்து வலியும் சுகமும்பெற்று வாழ்வதென்பதை நினைத்தால், உடம்பு நடுங்குகிறதல்லவா?

"தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனில் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்."—குறள்.

கழுதையும் குளவியும்.

ஒரு கதை.

முன் ஒரு காலத்தில் கடவுளுடைய படைப்பிலுள்ள புதுமையான ஜந்துக்களாகிய இரண்டு பிராணிகள் கோடைகாலத்தில் ஒருநாள் வெயிலுக்காக ஒரு மரத்து நிழலில் போய்ச் சேர்ந்தன. அவையிரண்டும் சற்றுநேரம் ஒன்றோடொன்று தத்துவங்களை யெடுத்துப் பேசித் தர்க்கம் செய்தன. அவ்விரண்டிலொன்று பொறுமைக்குப் பேர்போன பிரசித்தமான பிராணியாம்; மற்றொன்று மிகுந்த துர்மார்க்கமுள்ளதென்று பிரசித்திபெற்றது. பொறுமையுள்ள பிராணியான கழுதை ஸமாதானத்தையே கோரிற்று; கொடுமை செய்கின்ற குளவியோ, துஷ்டர்களுடைய சுபாவப்படி சண்டைபோடப் பிரியமுள்ளதாயிற்று. கொடுமை செய்யும் குணமுள்ள குளவி தன் சுபாவப்படி முதலில் சற்றுநேரம் உக்கிரமாகவே பேசிப் பிறகு கழுதையினிடம் நேசமுடையதாயிற்று; அப்படி நேசம்பாராட்டியதும் அதனுடன் வாதாடவேண்டுமென்கிற கபடமான நினைப்பினாலேயன்றி வேறல்ல. பிறகு அது கழுதையைக் கேட்டதாவது:

“நண்பரே, கழுதையாரே! நீர் ஏன் இப்படிப் பிறருக்கு நன்மை செய்வதற்காக அடிமைப்பட்டு ஓயாமல் வருந்தி உழைக்கிறீர்? நான் என் சிறகை விநோதமாக விரித்துக்கொண்டு பறந்து எனக்கிஷ்டமான விடமெங்கும் திரிந்து களிக்கின்றேனே! அன்றியும், என்னைக் கண்டு எல்லாரும் பயப்படும்படி நான் அதிகாரமும் செலுத்துகின்றேன்; நான் கோபத்துடனே கூவுவதையும், உக்கிரமாய்க் கடிப்பதையும் கண்டு எனக்குப் பயந்து கீழ்ப்படியாதவர் யார்? நான் இப்படிப் பெருமை பெற்றிருக்கையில், கையிலாகாத முண்டமே! நீ யேன் இப்படித் துன்பப்படுகிறாய்! உன்னிடத்தில் பக்ஷமுள்ளவர்போல நடிக்கின்ற நண்பர்களும், கொடுமைசெய்யத் துணியும் சத்துருக்களுமாகிய யாவரும் உன்னை யடித்துப் புடைக்கிறார்களே! உன் கால் குளம்புகளில் இருப்புச் சட்டங்களையும் அடித்துவிட்டார்கள் பார்!” என்று அகங்காரமாகப் பேசிற்று.

அதைக் கேட்ட கழுதை கூறியதாவது: “நண்பனே! நீ சொல்வதெல்லாம் உண்மையே; ஆயினும், நான் உன்னைப்போல எப்பொழுதும் நடுங்கிச் சாகவேண்டிய அவசியமில்லை பார். மனிதர்கள் என்னை யடித்தாலும் அதற்குப் பிரதியாக எனக்கு வசிக்க வீடும், தின்னத் தீனியு மளித்து ஆதரவுடன் என்னைக் காப்பாற்றுகிறார்கள்; நீயோ இப்படி மூர்க்கங்கொண்டு பகை பாராட்டிப் பிறரைத் துன்புறுத்துவதனால், சீக்கிரமே கொலையாளி கையில் அகப்பட்டுக் கொடிய மரணத்திற்கு ஆளாவாய்” என்று சாந்தமாகச் சொல்லிற்று.

கழுதை இவ்விதமாக முன்னறிந்து கூறியது வாஸ்தவமாகவே முடிந்தது. கழுதை சொல்லிற்றென்று அதை அலக்ஷியம் செய்யலாமோ? உடனே அந்தக் குளவி ஒருவனைக் கொட்டப்போயிற்று; அவன் மிகக் கோபங்கொண்டு அதை யடித்து மிதித்து நசுக்கிவிட்டான்.

குழிமுயலும் குள்ளவாத்தும்.

ஒரு குழிமுயலும் குள்ளவாத்தும் ஒரு ஆற்றோரத்தில் தங்கள் சிறுபிராயந்தொடங்கி ஒன்றாய்ச் சேர்ந்து சகோதரப் பிரீதியாய் அதிக விசுவாஸத்துடனே மிகவும் சவுக்கியமாயும் சந்தோஷமாயும் வசித்துக்கொண்டிருந்தன.

அவை குடிபுகுந்திருந்தவிடம் வெவ்வேறாக இருந்தாலும் இரண்டும் ஒன்றுக்கொன்று மிகச் சமீபமானவை. குழிமுயல் வசித்துக்கொண்டிருந்த வளையானது அந்த ஆற்றோரமான ஒரு தோட்டத்தில் வேலியிலிருந்தது. இருப்பிடம் அதிக சமீபமாயிருந்ததனால், அந்தத் தோழர்களிரண்டும் அடிக்கடி காலையிலும் மாலையிலும் ஒன்றாய்க்கூடிக் களிப்படைந்திருந்தன. அவை சிலவேளை ஆற்றோரத்திலும் சென்று விளையாடுவதுண்டு; சிலவேளை மரத்து நிழலிலும் போய் மகிழ்ந்திருப்பதுண்டு. அக்காலங்களில் அவை தமக்குள்ள கஷ்டநஷ்டங்களையும் சுகதுக்கங்களையும் சொல்லிக்கொள்வதுண்டு. ஒன்றுக்கு ஏதேனும் ஒரு குறைவு நேரிட்டால் அதைக் கண்டு மற்றொன்று விசனப்படும், ஒன்றுக்கு ஏதேனும் ஒரு பொருள் கிடைக்காவிட்டால், மற்றொன்று அதற்காகச் சங்கடப்படும்; ஒன்றுக்கு ஏதாவது ஒரு நன்மை விளைவதாயிருந்தால் அதைக் கண்டு இரண்டும் சந்தோஷப்படும். இவ்விதமாய் அவை அன்னியோன்னியமாக வாழ்ந்துகொண்டிருந்தன.

இப்படியிருக்க அவையிரண்டும் பிரியும்படியான பொல்லாத நாளொன்று வந்தது. அன்றையதினம் குழிமுயல் போஜனஞ் செய்யும்பொருட்டுக் குள்ளவாத்தின் வீட்டிற்குப் போயிற்று; போய்ப்பார்க்கையில் அங்கே குள்ளவாத்து காணப்படவில்லை. தோழனைக் காணாமற்போகவே முயல் மிகுந்த விசனமடைந்து கோவென்று கூவிற்று; அதன் அழுகைக்குரலுக்கு ஏனென்று கேட்பார் அங்கு ஒருவருமில்லை. அதனால் முயல் மிகுந்த பயங்கொண்டு தோழனைத் தேடிச் சற்று தூரம் ஓடும், மறுபடி திரும்பிவரும், ஆற்றோரத்திலுள்ள நாணலின் கீழே நுழைந்து பார்க்கும்; அலைகளின் கீழே குனிந்து பார்க்கும்; இப்படியே ஆயிரந்தடவை இங்குமங்கும் ஓடியல்லாடிற்று; ஆற்றில் முழுகிவிடவேண்டுமென்கிற எண்ணங்கூட அப்பொழுது அதன் உள்ளத்தில் உதித்திருக்கலாம்.

"ஐயோ! என் சகோதரி! நான் அழுவது உனக்குக் கேட்கவில்லையோ? என் உயிர்த்தோழி, எனென்று என்னுடன் ஒரு வார்த்தை சொல்லாயோ? என்னை இப்படி அதிகநேரம் அஞ்சி நடுங்கவிட்டு நீ பார்த்திருக்கலாமா? என் கண்ணே! நீ இவ்வண்ணமே யின்னும் சற்றுநேரமிருந்தால் என் உயிர் தானே போய்விடும்; இந்தத் துயரத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பதிலும் பிராணனை விட்டுவிடுவது மேலன்றோ?" என்று இவ்விதமாகப் புலம்பிக்கொண்டு கண்ணீர்விட்டு இங்குமங்கு மோடித்திரிந்து கடைசியில் அவ்விடத்து யஜமானனது வீட்டண்டை போய்ச் சேர்ந்தது.

அவ்விடத்தில் மிகப் பெரிய பக்ஷிசாலையொன்றிருந்தது. அதில் பற்பலவிதமான அநேகம் பறவைகள் ஒரு குளத்தில் சிறகடித்து விளையாடிக்கொண்டிருந்தன. பழக்கம் தைரியத்தைக் கொடுக்குமல்லவா? குள்ளவாத்துடன் வெகுநாள் பழகியதனால், மிகுந்த விசனமுற்றிருந்த அந்தக் குழிமுயல் அவற்றைக் கண்டு தைரியமாகவே அப்பக்ஷிசாலையினுடைய வேலியோரத்தில் சென்று உள்ளே யெட்டிப்பார்த்தது. எட்டிப்பார்த்தவுடனே அந்தப் பறவைக்கூட்டத்தில் தன்னுடைய தோழனை குள்ளவாத்து கூடியிருக்கக் கண்டு உள்ளடங்காத சந்தோஷமடைந்து ஆநந்தக் கூச்சலிட்டது. பிறகு அது சற்றுநேரங்கூடத் தாமஸிக்காமல் தன் தோழனைத் தேற்றும்பொருட்டு உடனே அதனிடஞ் செல்ல அந்த வேலியின்கீழ் வளை தோண்டத் தொடங்கிற்று. பூமிக்குள் சுரங்கம் வெட்டுகிறவர்கள்போலவே அந்தக் குழிமுயல் உள்ளுக்குள்ளேயே வளை தோண்டி வழி யேற்படுத்திக்கொண்டு பக்ஷிசாலைக்குள் போய்ச் சேர்ந்தது. இதைக் கண்டவுடனே அங்கிருந்த பறவைகளெல்லாம் பயந்து பறந்தோடத் தொடங்கின. குழிமுயல் அவ்விடத்தில் தன் தோழனை குள்ளவாத்தைக் கண்டு அதை உடனே தன் கள்ளவழிக்குள் இழுத்து அவ்வழியாகவே அதை அந்தச் சாலையினின்று வெளியே கொண்டுவந்து சேர்த்து ஆநந்தக் கடலில் முழுகியது.

அப்பொழுது அவைகளுக்கு உண்டான ஸந்தோஷம் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல நம்மால் முடியாது. பிறகு அந்த இரண்டு கூட்டாளிகளும் ஒன்றாய்ச் சேர்ந்து அதிகமான ஆநந்தங்கொண்டு அவ்விடத்திலேயே அச்சமில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்க விருப்பம் கொண்டன. ஆயினும் அவற்றினுடைய சந்தோஷம் அப்படியே நெடுநாள் நீடித்திருக்கவில்லை. தன்னுடைய பக்ஷிசாலையில் அந்தக் குழிமுயல் பூமியைப் பறித்துப் பண்ணின தீமைகளைக் கண்டு அந்தத் தோட்டத்து யஜமானன் மிகக் கோபங்கொண்டு, இவ்விடத்திலுள்ள குழிமுயல்கள் எலிகள் பெருச்சாளிகள் எல்லாவற்றையும் இப்பொழுதே அதஞ்செய்துவிடுகிறேன், மண்வெட்டி எங்கே! கட்டப்பாரை எங்கே! துப்பாக்கி எங்கே! என்று கூவினான்.

உடனே மண்வெட்டி, கட்டப்பாரை, துப்பாக்கி முதலியவை கொண்டுவரப்பட்டன. நாய்களும் காவலாட்களும் பலர் புறப்பட்டு எலிவளைகளைத் தேடத் தொடங்கி, கண்ணில் புலப்படுகிற குழிமுயல்களை உடனுக்குடனே கொலைசெய்துவிட்டார்கள். அந்த ஆற்றங்கரையெங்கும் கொல்லப்பட்ட அந்த ஜந்துக்கள் நிறைந்து பிணக்காடாகிவிட்டது. அவ்வளவோடு அந்த யஜமானனது கோபமடங்காமல் பலநாளும் அவன் அதே விதமாகக் கொடுமைசெய்யத் தொடங்கினான்.

நம்முடைய குழிமுயலின் கதை யென்னவென்பீர்களோ? அது உடனே ஆற்றங்கரையில் ஒரு நாணலின்கீழே போய்ப் பதுங்கித் தன் தோழன் பக்கத்தில் உட்காந்து, தனக்கு எந்த நிமிஷம் மரணம் நேரிடுமோவென்று நடுங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது அது தன் தோழனை நோக்கிச் சொன்னதாவது: "நண்பனே! எனக்கு மரணகாலம் சமீபித்துவிட்டது, உன் கண்ணெதிரில் நான் உயிரை யொழிப்பது ஒருநாளும் நீங்காத விசனத்தை உண்டாக்கும்; நீ இப்பொழுதே இவ்விடம் விட்டு ஆற்றின் அக்கரைபோய்ச் சேர்" என்று சொல்லிற்று.

அதைக்கேட்ட குள்ளவாத்து, 'நான் உன்னை ஒரு நிமிஷங்கூட விடமாட்டேன், உன்னைவிட்டுப் பிரிந்தால் இப்பொழுதே எனக்கு உயிர் போய்விடுமே' என்று சொல்லி மறுபடியும் "நீயும் என்னுடனே இவ்வாற்றின் அக்கரைக்கு வந்துவிடுவாயானால் நாம் அங்கு சுகமாக வாழலாமே; ஆற்றைக் கடந்துவர உன்னாலாகுமா! ஏனாகாது? சற்றுப் பொறு, நான் அதற்கு ஒரு உபாயஞ்செய்கிறேன்" என்று அதை அங்கே விட்டுவிட்டு அப்புறம் போயிற்று.

போனது தெரியாமல் வாத்து உடனே பக்ஷிக்கூடு ஒன்றை யிழுத்துக்கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தது. வந்ததும் அந்தக் கூட்டின் அடியில் நாணல் இலைகளைப் பரப்பிக் காலாலும் மூக்கினாலும் அதனை நன்றாயழுத்திக் குழிமுயலின் சுமையைத் தாங்கத்தக்க ஒரு சிறு படகுபோலச் செய்து, அதைத் தண்ணீர் ஒரத்தில் இழுத்துவிட்டது. குழிமுயல் மெல்ல வந்து அதன்மீதேறி யுட்கார்ந்தது. வாத்து தான் நீந்திக்கொண்டே மெதுவாக அந்தச் சிறு படகை நீரோடையில் தள்ளிக்கொண்டு போயிற்று. சீக்கிரமே அவை யிரண்டும் சுகமாக அவ்வோடையின் எதிர்க்கரை போய்ச் சேர்ந்தன. அக்கரையில் எறியபொழுது அந்தக் கூட்டாளிகளுக்கு உண்டான ஆநந்த மெப்படிப்பட்டதாயிருக்குமோ, நீங்களே அதை ஆலோசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். அந்தவிடத்தில் அவையிரண்டும் தமக்குச் சுகமான இருப்பிடமொன்று தேடிக்

கொண்டு, அங்கே ஒருவிதமான விசாரமுமின்றிச் சுகமாகக் காலங்கழித்தன. வாயில்லா ஜந்துக்களின் அறிவையும் நேசத்தையும் பாருங்கள்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு."—குறள்.

போஜன விஷயத்தில் ஜீவ காருணியம்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள்."—குறள்.

கடவுளுடைய படைப்பில் ஒரு பகுதியான நமக்கும் வாயில்லா ஜீவன்களுக்கும் ஏதோ ஒரு விதமான உதவிசெய்யும் சம்பந்த முண்டென்கிற கொள்கை விசேஷமாக விருத்தியாகிவருகின்ற இக்காலத்தில், "ஊனைத்தின் றூனைப்பெருக்காமை முன்னினிது" என்று கூறியபடி, நமது தேகவளர்ச்சிக்கு மாமிச போஜனம் சிறிதளவும் அவசியமில்லாததென்பதைப் பிரஜைகள் சற்று ஆலோசித்துப் பார்ப்பார்களானால், எளிய ஜீவன்களைத் துன்புறுத்துவதைசெய்ய மிகவும் அச்சப்படுவார்களென்பது நிச்சயம். ஆடு மாடுமுதலிய பிராணிகள்தாழ்ந்த ஜீவன்களேயானாலும், நம்மோடுகூடப்பிறந்து வாழ்கின்றவைகளல்லவா? ஊனுணவு வாய்க்கு இனிப்பாயிருக்கின்ற தென்பதனாலேயே நாம் அவற்றைக் கொன்று தின்றுவிடலாமா? ஆதலால் 'புலையும் கொலையுங் களவுந்தவிர்' என்ற ஔவையார் வசனத்தையும் ஆலோசித்துப்பார்த்து ஊனுணவை யொழிப்பார்களானால், ஜீவகாருணியம் யாவருக்கும் மேன்மேலும் விசேஷமாக விருத்தியாகுமென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

மரக்கறி பதார்த்தம் புசிப்பவர்கள்.

ஊனுணவை யொழித்து மரக்கறி பதார்த்தங்களையே புசிப்பவர்கள் மிகவும் சொற்பமே. ஆயினும், உள்ளவாயில் அனுபவத்தைக் கேட்டால், ஊனுணவினும் மரவுணவே மேலான தென்கிறார்கள். மாமிச போஜனத்தினால் தேக பலமும் சவுக்கியமும் அதிகமாகின்றனவென்பது ஒருபுறமிருக்கட்டும்; அதனால் நோயும் அசவுக்கியமும் அதிகமாகின்றனவென்பது நிச்சயம். மாமிசம் புசிக்கும் தனவான்கள் உணவு வாய்க்கு மிகவும் உருசியாயிருப்பது கண்டு மிதம்மிஞ்சிப் புசிப்பதனாலும், அதனால் உண்டாகும் திருட்டுப் பசியினாலும் அதிகமாய் அவஸ்தைப்படுகிறார்கள். அது காரணமாக அவர்கள் மயக்கம் தரத்தக்க மத்தியங்களை விசேஷமாகக் கையாளத் தொடங்கித் துன்பப்படுகிறார்கள். மரக்கறி பதார்த்தங்களோ, அப்படியில்லை; அவற்றையே உணவாகக் கொள்பவர்கள் 'அற்றாலளவறிந்துண்க' என்றபடி தங்கள் பசிதணியுமளவிற்குப் போதுமானவளவே புசித்துத் திருப்தியடைகிறார்கள். ஒஷதிவகைகளையே உண்ணும் வழக்கமானது, பெருந் திண்டியிலுள்ள பேராசையைத் தணித்து மிதபோஜனஞ் செய்யும்படியான நற்குணத்தை உண்டாக்குகிறது. அதனால் ஜீவகாருணியத்தை விருத்திபண்ணுகிற இந்த நல்லவழக்கத்தைக் கையாளுகிறவர்களுக்குத் தேக சவுக்கியமும் மனத்தெளிவும் உண்டாகின்றன. ஊனுணவை யொழிப்பதனால், ஜீவனத்திற்கு வேண்டிய செலவுகளும் அதிகமாகச் சுருங்குகின்றது; சாப்பாடு செவ்வையில்லையென்றும், சமையல் செவ்வையில்லையென்றும் அதிருப்திகொண்டு குறை கூறுவதும் குறைந்துபோகின்றது. நமக்குப் பிரியமான ஒன்றை நாம் விட்டுவிடுவதனால் நாம் மிகுந்த விவேகமுள்ளவ ராவோமென்றால், நாம் அதை யேன் விட்டுவிடலாகாது; ஐம்புலன்களின் ஆசையில் அழுந்தி அதை யொழிக்கத் திறமையில்லாதவன், பிசாசத்தின் விலங்கி லகப்பட்டவனென்றும், மானிடகோடியில் சேராத இகழத்தக்க அடிமையென்றும் மதிக்கத்தக்கவனாவான். இக்காலத்துப் பலபேர்களுடைய அனுபவங்களையும் யோசிக்குமளவில், மாமிசமாயினும், மத்தியமாயினும், புகையிலையாயினும் மானிடருடைய ஜீவனத்திற்கும் சவுக்கியத்திற்கும் சிறிதளவும் தேவையானதன்றென நன்றாய் விளங்குகின்றது. ஆதலால்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்."—குறள்.

பக்ஷிவேட்டை.

பறவைகளை வேட்டையாடுவது மிகக் கொடிய செய்கையென்பதை இதுவரையில் அநேகந்தடவைகளில் தெரிவித்திருக்கிறோம். யோசிக்குமளவில், வேட்டையாடுவதனால் ஜீவஹிம்ஸை தவிர மற்றொரு நன்மையும் உண்டாவதில்லை. அன்றியும் நாடுகளுக்கும் காடுகளுக்கும் அதிகமான அழகை யுண்டாக்குகின்ற பறவைகளை வேட்டையாடிக் கொலைசெய்பவன் கடவுளுடைய சிருஷ்டியைக் குலைக்கின்றவனாகிறான். ஆதலால் ஒரு பத்திராதிபர் சொல்வதுபோல், தாய்தந்தையர்களும் பாடசாலை யுபாத்தியாயர்களும், பறவைகளை வேட்டையாடுவது புத்தியீனமான காரியமென்றும், கொடுமையென்றும், பிள்ளைகளுடைய மனதில் நன்றாகப் பதியும்படி சிறுவயதிலேயே பழக்கிவிடுவார்களானால், பெரியவரானபின் அவர்கள் அந்தக் கேடுகெட்ட வழக்கத்தை மேற்கொள்ளமாட்டார்கள். இவ்விஷயத்தைப் பத்திராதிபர்களும் பலர் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்யத் தலைப்பட்டிருக்கிறார்களென்பது மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது.

இரண்டு கக்ஷிக்காரருடைய வாதம்.

முன் ஒரு சமயத்தில் ஒரு பூனை சமையலறையின் கதவண்டை படியின்மேல் உட்கார்ந்து சோர்ந்து விசாரப்பட்டுக்கொண்டிருந்தது. அது கண்டு அவ்விடத்திற்கு வந்த யஜமானன், 'என்ன விசேஷம்? ஏனிப்படி சோர்வடைந்திருக்கிறாய்?' என்று கேட்டான். அதன்மேல் உண்டான சம்பாஷணையாவது:

பூனை: (தலையை ஒருபுறமாகத்திருப்பிக்கொண்டு) விசேஷத்திற்கென்ன குறைவு? என்னைக் கொல்லப்போகிறாளாம், சமையற்காரி சொல்லுகிறாள். அவளை யாராவது பிடித்துக் கொன்றாலல்லவோ, என் துக்கந் தீரும்.

யஜமானன்: ஏன்? அவளேன் அப்படிச்சொன்னாள்?

பூனை. அவ்வளவோடு விட்டாளோ? என்னையடித்துப் புடைத்தாள், திருட்டுப் பூனையென்று திட்டினாள்; உடனே என் உயிரை வாங்குவதாக வெருட்டினாள்.

யஜ. ஆ! ஆ! அப்படியா? ஐயோ! ஏன் இப்படியெல்லாம் சொல்லும்படியாக நேரிட்டது?

பூனை. ஓ! விசேஷமொன்றுமில்லை. நடந்தது மிகவும் அற்பமானது; வாஸ்தவத்தில் ஒரு குற்றமுமில்லை யென்றே சொல்லலாம். இத்தனைக்கும் அவளுடைய கோபமே காரணம்; அவளுடைய கோபத்தைப்பற்றி வேலைக்காரர்கள் எல்லாருமே முறையிடுகிறார்கள்; இத்தனை நாள்வரையில் அவர்கள் அவளைத் தூக்கிடாமல் வைத்திருப்பது வெகு ஆச்சரியமே.

யஜ. சமையற்காரிகளைத் தூக்கிடுவது சரியல்லவே. அப்புறம்? அதன்மேல் என்ன நடந்தது?

பூனை. அப்புறமென்ன? இன்று காலைமுதல் எனக்கு ஒரு துளி பால்கூட அகப்படவில்லை; நான் இப்படி கஷ்டப்படுகிறேன்.

யஜ. சரிதான், இதற்கெல்லாம் உண்மையான காரணமென்ன?

பூனை. நான் முன்னமே சொல்லவில்லையா? அவள் தான் எதை உடைத்தாலும், என் மேலேயே பழிபோடுகிறாள். அந்த அக்கிரமத்தை யென்ன சொல்வது? நானதுபற்றிச் சகித்துக்கொண்டிருக்கிறேன்—என்றது.

அதைக் கேட்கையில் அந்த யஜமானனுக்கு அதிகமான எரிச்சல் உண்டாகிவிட்டது; ஆயினும் முன் கோபத்தை வெளிவிடாமல் அடக்கிக்கொண்டு சற்று ஆலோசனைசெய்து சொல்லுகிறான்.

யஜ. ஆனால் இன்றுகாலையில் ஒரு விசேஷமும் நேரிடவில்லையோ?

பூனை. அவள் என்மேல் கோபங்கொண்டாள். அதற்குக் காரணம் நான்—நான் செய்த காரியந்தான்.

யஜ. என்ன செய்தாய்? நான் அதைக் கேட்கலாமோ?

பூனை. கேட்டுச்சொல்லும்படி அத்தனை பெரிய சங்கதி யொன்றுமில்லை; நான் ஏதோ சொற்பம் பிசகு செய்தேன்—என்றது.

அதைக்கேட்ட யஜமான் கோபத்துடனே அதை விழித்துப் பார்க்க, அந்தக் குற்ற மின்னதென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்பது அவனது அபிப்பிராயமென்று அறிந்துகொண்டு பூனை, "மற்றொன்றுமில்லை; நான் இன்று காலையில் எனக்காக வைத்திருந்த போஜனத்தை விட்டு வேறொன்றைத் தின்னப்போனேன்" என்றது.

யஜ. ஓ! அப்படியா? இப்பொழுது எல்லாம் சரியே!

பூனை. அப்படியல்ல; உண்மை யென்னவென்றால், ஒரு எலியைக் கண்டு நான் அதன்மேல் பாயப்போனேன்; அப்போது அங்கே வைத்திருந்த ஒரு பல்லாய் கீழே வீழ்ந்து உடைந்தது; அதிலிருந்தது இன்னதென்று தெரியாமல் நான் அதில் வாயை வைத்தேன்; அது வாய்க்கு வெகு உருசியாயிருந்தது; அப்பால்,—

யஜ. உடனே அதை முழுமையும் ஒழித்துவிட்டாய்போலும்.

பூனை. அப்பொழுது அந்தச் சமையல்காரி உடனே உள்ளே வராமலிருந்தால், அப்படியே முடிந்திருக்குமோ என்னவோ? திடீரென்று அவள் வந்துவிட்டாள்: ஒன்றே ஒன்று மிகுந்துபோயிற்று.

யஜ. என்னது ஒன்று மிகுந்துபோனது?

பூனை. மிகுந்த ஆவலோடு கேட்கிறீர்களே!

யஜ. ஆவலென்ன? எனக்கு உண்மை தெரியவேண்டாமோ?

பூனை. மற்றொன்றுமல்ல, சாப்பாட்டுக்காகச் சுட்டுவைத்திருந்த அதிரசம்.

யஜ. ஆனால் இப்பொழுது சரிதான்; நீ முறையிட்டுக்கொள்ளவேண்டுவது வாஸ்தவமே. நான் இப்பொழுது இந்த வியவஹாரத்தின் இரண்டு கக்ஷிகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன்; அவள் உன்னை உடனே கொல்லாது விட்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது.

அடிப்பதற்கு முன்னே ஆய்ந்தோய்ந்து பார்த்தல் வேண்டும்.

நாயினது நற்குணம். — சிறு பிராயத்தில் படித்த சிறு கதை யொன்று இப்பொழுது ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது: ஒரு வர்த்தகன் குதிரைமீதேறிச் சவாரிபோனான்; அவனுடைய நாயும் கூடவே போயிற்று. வழியில் ஒரு குளக்

கையில் அவன் ஒரு காரியமாகக் குதிரையை விட்டிறங்கினான்; அப்பொழுது அங்கே அவன் மடியிலிருந்த பணப்பை கீழே வீழ்ந்துபோயிற்று; அதை நாய் பார்த்தது, வர்த்தகன் கவனிக்கவில்லை. நாய் அதைக்கண்டு குரைத்தது. வர்த்தகன் அதையும் கவனிக்காமல் தன் வேலை தீர்ந்தவுடனே குதிரைமேலேறிக்கொண்டு போகப் புறப்பட்டான். குதிரை வேகமாயோட ஆரம்பித்தது கண்டு நாய் அதன் முன்னே பாய்ந்து பாய்ந்து ஓயாமல் குரைக்கத் தொடங்கிற்று; வர்த்தகன் நாயைச் சவுக்காலடித்தான், அப்பொழுதும் அது குதிரைக்கு வழி விடாமல் மறித்துக் குரைத்தது. அது கண்டு யஜமானன் தன் நாய்க்குப் பைத்தியம் பிடித்ததென்று நினைத்து, துப்பாக்கியால் அந்த நல்லறிவுள்ள நாயைச் சுட்டுவிட்டான். இப்படி அடிபட்ட நாய் தன் உடம்பில் உதிரம் ஆறாய்ப் பெருகுகிற அக்காலத்திலும் நன்றி மறவாமல் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டுபோய் யஜமானனது பணப்பையண்டை சேர்ந்தது. பிறகு சீக்கிரமே வர்த்தகனுக்குப் பணப்பை ஞாபகம் வந்துவிட்டது; குதிரையைத் திருப்பிக்கொண்டு தானிறங்கின விடத்திற்கு ஓடினான். அங்கே அந்த நன்றியுள்ள நாய் பணப்பையைப் பார்த்துக்கொண்டு குற்றுயிராய்த் துடிக்கக் கண்டான். ஆ! மறுநிமிஷத்தில் அது இறந்துபோயிற்று.

மாடுகளின் உழைப்பு. — பயிர்த்தொழிலாளி ஒருவன் சொல்லிய கதையொன்று கூறுகிறேன் கேளுங்கள்: நான் சிறுவனாயிருந்தபோது ஒரு குடித்தனக்காரனிடத்தில் கூலிவேலை செய்துவந்தேன். அப்பொழுது ஒருநாள் ஏர் உழுதுகொண்டிருக்கையில், ஏரில்பூட்டிய எருதுகளில் ஒன்று நடக்கவேமாட்டாமல் நிமிஷத்திற்கு நிமிஷம் படுத்துக்கொள்ளத் தொடங்கிற்று. அதைக் கண்ட யஜமானனுக்கு அந்த எருதினிடத்தில் அதிகமான கோபமுண்டாகிவிட்டது. அதனால் அவன் அந்த எருதுக்குப் புத்தி வரும்படி செய்யவேண்டுமென்று, அது எழுந்திருக்கக் கூடாமல் அதன் கழுத்தில் என்னை உட்கார்ந்து அழுத்திக்கொள்ளும்படி சொல்லித் தான் சவுக்கெடுத்துக் கை ஓயாமல் அதை அடிக்கத் தொடங்கினான்.

அந்த எருதின் நல்லகாலம் அப்பொழுது ஜீவகாருண்யமுள்ள ஒருவன் அவ்வழியே வந்தான். அவன் இதைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, வாயில்லா ஜந்துவை இனிப்படி வீணாய் அடித்துக் கொல்லுகிறீர்கள்; எருது ஏன் நடக்கவில்லை; இதில் ஏதோ குற்றமிருக்கிறது; எருது எழுந்திருக்கட்டும்; நாம் சோதனை செய்து பார்ப்போம் என்று சொல்லி அவன் அந்த எருதைத் தட்டிக்கொடுத்தான். உடனே அது எழுந்திருந்தது. அவன் எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்த்தான், ஒரு குற்றமும் காணப்படவில்லை. பிறகு எருதை நன்றாய் உற்றுப்பார்க்கையில் அதன் கழுத்துப் புண்ணாயிருந்தது; அதனோடு நுகத்தடி கழுத்தில் தாங்குமிடத்தில் கொஞ்சம் பிளந்து முள் ஒன்று மாட்டிக்கொண்டிருந்தது; எருது ஏரை இழுக்கும்பொழுது நுகத்தடி கழுத்தின்மேல் அழுந்துகையில் அங்கிருந்த முள் அந்தப் புண்ணில் பொத்தி அந்த நோவு பொறுக்காமல் அது படுத்துக்கொள்ளும்படியாகிறது. இந்த உண்மையை அவன் கண்டறிந்து யஜமானனுக்குச் சொன்னான். பிறகு பார்த்தால் அப்படியே யிருந்தது. அந்த வழிப்போக்கன் அப்பொழுது அவ்விடம் வந்திராமல் போனால், 'எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா' என்றபடி எங்கள் அருமையான எருதின் நோயறியாமல் நாங்கள் அதை வீணாக அடித்து அதிகமாகத் துன்பப்படுத்தியிருப்போம்—என்று சொல்லுகிறான்.

ஆகையால், இவையெல்லாம் வாயில்லா ஜந்துக்கள் என்பதை சிறுவர் பெரியோர் ஆகிய யாவரும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். அவைகளுக்குப் பசியோ தாகமோ, குளிரோ காய்ச்சலோ, இளைப்போ வலிப்போ, நோயோ புண்ணோ, ஒரு சங்கதியும் நம்முடன் சொல்ல அவைகளுக்கு வாயில்லையே! ஆகையால் இப்படிப் பேசுந்திறமையற்றிருக்கிற வாயில்லாத ஜந்துக்களை அடிக்கும்படி நேரிட்டால், அடிப்பதற்குமுன் யாவரும் நன்றாக ஆய்ந்தோய்ந்து பார்த்தல் அவசியம்.

இரண்டு மேன்மக்கள்.

அமெரிக்கா தேசத்தில் புத்தித்திறத்தில் சிறப்புற்றவர்களாகிய இரண்டு மேன்மக்கள் பெரும் புகழ்பெற்று வாழ்ந்தார்கள். இருவருக்கும் பிறந்த நாள் பண்டிகை பெப்ருவரி மாதத்திலே வருகின்றமையால், அவர்களது பெருமையை இப்பொழுது சிறிதளவு எடுத்துக் கூறுவோம். அவர்கள், ஜியார்ஜ் உவாஷிங்டன், எப்ரஹாம் லிங்கோன் என்பவர்களாம். அவர்கள் ஏற்றமுள்ளவர்களானதற்கு யாது காரணம்? உலகத்தில் எவருக்குமில்லாத அவ்வளவு அதிசயமான புத்தித்திறமுள்ளவர்களா யிருந்தனரோ வென்று கேட்பீர்களோ, கேளுங்கள்:

உவாஷிங்டனாயினும், லிங்கோனாயினும் கல்விகற்றுத் தேர்ந்தவரல்லர். உவாஷிங்டன் எழுதிய கடிதங்களைப் பார்த்தால் எழுத்துப் பிழைகள் நிறைந்திருக்கும். நன்றாகக் கல்விகற்றுத் தேர்ந்த புலவர்களுடன் சரியாக எழுதவாயினும், பேசவாயினும் அவருக்குத் திறமைபோதாது; அந்தத் துறையில் அவருக்கு உருசி பிறக்கவில்லை. ஆயினும், ஒருவன் எவ்வளவு அறிந்துகொள்ளலாமோ, அவற்றினும் மிகச் சிறந்தவையான பற்பல விஷயங்களை அவர் தெரிந்துகொண்டார். நன்மை தீமை யிரண்டையும் அறியும் தன்மையுடையவர்களுக்கு இவ்வுலகம் எவைகளைக் கற்

பிக்குமோ, நன்மையையே நாடுகிறவர்களுக்கு இவ்வுலகம் எவைகளைக் கற்பிக்குமோ, அத்தன்மையான கல்வியை அவர் அனுபவ அறிவின் மூலமாகக் கற்றுணர்ந்தார். அவர் சிறந்த விவேகமும், பெருந்தன்மையான மனமும், நற்குணமும் உடையவர்.

உவாஷிங்ட்டன் பதினாறுவயதிலேயே பள்ளிக்கூடத்துப் படிப்பை விட்டுவிட்டார். இராணுவத்தையும் இராஜாங்கத்தையும் சேர்ந்த காரியங்களிலே மனதைமிகுதியாகச் செலுத்திய அவருக்கு வெறும் புத்தகப் படிப்புக்கு ஒழிவு அதிகமாக உண்டாகவில்லைபோலும். புத்தகப் படிப்பினாலேயே ஒருவன் பெரிய பிரபுவாகிவிடமாட்டான்; மிகச் சிறந்தவரான மனிதர்கள் புத்தகப்படிப்புடன் இன்னும் பலவற்றைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். உவாஷிங்ட்டனது மனமும் புத்தியும் ஒன்றாய்க்கூடி உழைக்கத்தலைப்பட்டன. இப்பொழுது நமது ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தார் இந்த 1902-ம் வருஷத்துப் பிரஜைகளுக்கு எந்த விஷயத்தைத் தெளிவாய்த் தெரிவிக்க முயன்றிருக்கிறார்களோ, அந்த விஷயத்தை உவாஷிங்ட்டன் சிறுபிராயத்திலேயே தெரிந்துகொண்டார். தமது காலத்தில் அவர் எவ்விதமான ஹிம்ஸையும் எவருக்கும் செய்ததாக எவரும் கண்டதில்லை. சட்டமேற்படுத்தி அதன் மூலமாக ஜீவஹிம்ஸையை நிவாரணம் செய்யவேண்டுமென்ற கருத்து அவர் காலத்தில் ஒருவருக்கும் தோன்றவேயில்லை; ஆயினும், இக்காலத்தில் நமக்கு மிகவும் கொடுமையென்று தோன்றுகின்ற பல ஹிம்ஸைகளும் அக்காலத்திலும் செய்யப்பட்டு வந்தனவாகத் தெரிகிறது. மனவுருக்கமுள்ள மனிதர்கள் அதைக் கண்டு இக்காலத்திற்போல் அக்காலத்திலும் சகிக்கமாட்டாமலிருந்தார்கள். ஜீவகாருணியமுள்ளவர்கள் எப்பொழுதும் தங்களுடைய வாயில்லா ஜந்துக்களிடத்திலும் காருணியமுள்ளவர்களாகவேயிருக்கிறார்கள். தம்முடைய நாட்டுக்குநல்லதந்தையெனத்தகுந்த ஜியார்ஜ் உவாஷிங்ட்டன், கொடுமையாகவேனும், அதைரியமாகவேனும், ஒன்றும் செய்தவரல்ல. அவருக்குக் குதிரைகளிடமுள்ள விசுவாஸம் மிகப் பிரசித்தமானது. தம்மோடுகூடப் பழகுகின்றவர் ஒரு பெரிய பிரபுவாகட்டும், எளிய அற்பப் பிராணியாகட்டும், அனைவருக்கும் ஒரு தன்மையாகவே அவர் நல்லவராயிருந்தார். அவர் தாமேறிச் சவாரிசெய்யும் குதிரைகளைத் தமது சிநேகிதனுக் கொப்பாக நடத்தினாரேயன்றி மற்றப்படியல்ல வென்பது நன்றாகத் தெரிந்தவிஷயம்.

எப்ரஹாம் லிங்கோனும் வாயில்லா ஜந்துக்களிடத்தில் அதிகமான விசுவாஸமுடையவர். அவர் ஒரு சமயத்தில் ஒரு காரியமாகப் போய்க்கொண்டிருக்கையில், சேற்றிலே ஒரு பன்றி காலழுந்தியெழுந்திருக்கமாட்டாமல் தவித்தது கண்டு தாம் அந்தச் சேற்றுவழியே திரும்பிவந்து அதற்குத் தாம் செய்யவேண்டிய ஸகாயம்செய்து அதைக் காப்பாற்றினாரென்பது மிகப் பிரசித்தமான விஷயம். சிறுவயது முதற்கொண்டே அவர் பக்ஷிகளிடத்தில் அதிகமான பக்ஷமுடையவராயிருந்தார். எளியவர்களும் உதவியற்றவர்களுமான பலருடைய கஷ்டங்களைப் பார்த்து அவர் மிகவும் பரிதாபப்பட்டார். அமெரிக்காவில் சண்டையோய்ந்து முழுமையும் ஸமாதானமுண்டானபிறகு அவர் ஜீவதசையோடிருந்திருப்பாரானால், அமெரிக்கா கண்டத்தில் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அப்பொழுதே செய்திருப்பார் என்பது நிச்சயம். மற்றவர்கள் எளனஞ் செய்கையிலும், அவர் அதை லக்ஷியம்பண்ணாமல் ஜந்து ஹிம்ஸை நிவாரணஞ்செய்யப் பாடுபட்டிருப்பார்; அந்தத் தேசத்தவர்களே இந்தச் சபைக்கு முதன்மையான அத்தியக்ஷர்களாயும் ஏற்பட்டிருப்பார்கள்.

இப்பொழுது நாம் இந்த இரண்டு பிரபுக்களுடைய வாழ்நாளைப்பற்றிச் சற்று யோசிப்போம். சிறுவர்களே, சிறுமிகளே! இவ்விருவரும் அவ்வளவு நல்லவர்களாயிருந்திராமற்போனால், அவ்வளவு பெருமை பெற்றவர்களாவார்களா? நீங்களே நினைத்துப்பாருங்கள். அவர்களுக்கு ஜீவகாருணியம் அவ்வளவு அதிகமாயில்லாதிருந்தால், அவர்கள் அவ்வளவு விவேகமும் நியாயமுமுடையவர்களாவார்களோ? சிறந்த புத்திசாலிகளாயிருப்பவர்களும் பலர் பயங்காளிகளாயிருந்திருக்கிறார்களென்று சரித்திரங்களில் கண்டிருக்கிறோம். நல்லவர்களான பெருந்தன்மையுள்ள பிரபுக்கள், மனிதர்களுக்காயினும் மிருகங்களுக்காயினும் எவ்விதமான கொடுமையேனும் செய்ததாகக் கண்டதுண்டோ? எங்கும் கண்டதில்லை. சிறந்த விவேகமும், நியாயமும், ஜீவகாருணியமும் உடையவர்களே உலகத்திற்கு மிகுந்த உபயோகமுள்ளவர்களாயிருந்திருக்கிறார்கள். ஆகையால் நீங்களும் அவர்களைப்போலவே உள்ளத்திலும் புத்தியிலும் உயர்வுபெற்றவர்களாயிருக்கப் பாடுபடுங்கள். இந்த ஜியார்ஜ் உவாஷிங்ட்டனையும், எப்ரஹாம் லிங்கோனையும் பார்க்கிலும் மேலான மேல்வரிச்சட்டம் உங்களுக்கு எங்கும் கிடைப்பது அரிது.

அன்பே பிரதானம், அதுவே வெகுமானம்.

நம்மோடு கூடிப் பழகுகின்ற எளிய வாயில்லா ஜந்துக்கள் நம்மிடத்தில் நம்பிக்கையும் விசுவாசமுமுள்ளனவாகி அன்போடு நம்மை விழித்துப்பார்த்து மகிழ்ச்சி கொள்ளும்படி செய்வதினும் பேரானந்தம் நமக்கு வேறுண்டோ? நாம் அன்புபாராட்டினால் அவைகளும் நம்மிடத்தில்

அன்புபாராட்டத் தடையில்லை; அன்பே பிரதானம், அதுவே வெகுமானமல்லவா? இது வாயில்லா ஜந்துக்கள் விஷயத்திலும் பொருந்தியிருப்பதேயாம். இதைப்பற்றி ஒரு குதிரையின் யஜமானன் கூறியதாவது, 'தன்னிடத்தில் அன்புள்ளவர் இன்னாரென்று என் குதிரைக்கு நன்றாய்த் தெரியும். என் குதிரை என்னைக் கண்டவுடனே நாலுகால் பாய்ச்சலாய் என்னிடம் ஓடிவரும்' என்கிறான். தயையென்பது தேவனுடைய உருவமேயன்றோ? அந்த தயை ஒருவனிடத்தில் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கொடுமை அவனிடத்தில் குறைவுபடும்; அதுபற்றிக் கடவுளால் படைக்கப்பட்ட ஜீவவர்க்கம் அதிகமான சவுக்கியமும் ஆநந்தமுங்கொண்டு வாழலாகும். அது காரணமாகக் கடவுளுடைய காருணியமும் நம்மிடத்தில் அதிகமாகும்.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்."—குறள்.

சிறகுக்குப் பிரதியாக ஏற்பட்ட சிரோபூஷணம்.

ஐரோப்பிய ஸ்திரீகள் பலர் பறவைச் சிறகுகளால் தமக்குச் சிரோபூஷணம் செய்துகொள்ளுகிறார்களல்லவா? கேவலம் தங்கள் தேகத்தை அலங்கரித்துக் கொள்வதற்காகவே அநந்தமான பக்ஷிகளை அநியாயமாய் அடித்துக் கொல்வதைப் பார்த்துக் கருணைகொண்ட ஒருவர், பறவைச் சிறகினாலாகிய சிரோபூஷணத்திற்குப் பிரதியாக மற்றொரு பொருளை உபயோகித்துக்கொள்ளலாமென்று எடுத்துக் காட்டியிருக்கிறார். அதை உபயோகித்துக்கொள்ளத் தலைப்பட்டால், இதுவரையில் செய்துவந்ததுபோல ஜீவன்களைக் கொலை செய்யவேண்டிய அவசியம் ஒழிந்துபோகுமல்லவா? அவர் எடுத்துக் கூறிய பொருளாவது, பறவைச் சிறகுபோன்ற ஒருவகைப் புல்லேயாம்.

அந்தப் புல் பார்வைக்குக் குளிர்ச்சியாயும் அழகாயுமிருக்கிறது; வர்ணத்திலும் பறவைச் சிறகுக்கு ஒப்பாயிருக்கிறது. அதிலும், ஒரேவிதமன்றிப் பற்பல வகைகளுமிருக்கின்றன. அதைக் கழுவிச் சுத்தி செய்துகொள்ளலாம்; தரித்துக்கொள்பவர்களுக்கு எந்தெந்த வர்ணம் விருப்பமோ, அந்த வர்ணம் உண்டாகும்படி சாயமேற்றிக்கொள்ளலாம். பார்வைக்கு அதுவும் இறகுபோலவே யிருப்பதனால், பாவத்திற் கேதுவான ஜீவஹிம்ஸையும், பசித்திருக்கும்படியான பணச்செலவுமில்லாமல், இதையே சிறந்த அலங்காரமாகத் தரித்துக்கொள்ளலாம். இறகு வாங்குவதற்குப் பிடிக்கும் செலவில், ஐம்பதிலொரு பங்குகூட இதற்குச் செலவு பிடிப்பதில்லை.

பக்ஷி இறகைப்போல இந்தப் புல் அதிகநாள் நீடித்திராதென்பது மாத்திரமே இதற்குள்ள குறைவு. நன்றாகப் பாடுபட்டுப் பயிரிட்டால், இது வெகு செழிப்பாக வளரும். இதை யாவரும் வழங்கத் தலைப்படுவார்களானால், இதைப் பயிரிடுதல் ஒரு பெரிய ஜீவனோபாயமுமாகும்.

கொடிய வேட்டைகள்.

வேட்டையாடுகிறவர்களது வாஸஸ்தானமென்று சொல்லத்தக்கதாகிய இங்கிலாந்துதேசத்தில், இப்பொழுது அநேகர் வேட்டையாட விருப்பங்கொண்டு அடிக்கடி தேம்ஸ்நதி முகத்துவாரத்தண்டையில் போய் அங்கே வசிக்கின்ற அழகான பக்ஷிகளை அநியாயமாய் அழிப்பதாக ஒரு பத்திராதிபர் எழுதுகிறார். அதைப்பற்றி அவர் சொல்லுவதாவது:

பறவைகளை வதைக்கும் இந்த வேட்டைக்காரர்கள் விஷயத்தில் எனக்கு உண்டாயிருக்கின்ற வெறுப்பு இவ்வளவென்று வாயினால் சொல்லமுடியாது. அதைப்பற்றி நான் சொல்வதாவது, யுக்தாயுக்த விவேகமில்லாமல் ஜீவஹிம்ஸை செய்வதில் அவர்களுக்குள்ள இந்தக் கேடுகெட்ட விருப்பமாவது இங்கிலாந்து தேசத்தாருடைய பெருமையைப் பாழ்பண்ண ஏற்பட்டதுபோலும் என்பதேயாம். அவர்கள் முக்கியமாகச் செய்கிற கொடிய விளையாட்டு என்னவென்றால், அங்கே அவர்கள் ஆற்றங்கரையிற் சென்று ஒரு படகு குடிக்கூலிக்கு வாங்கிக்கொண்டு அதிலேறிப்போய் அங்குள்ள **தல்** என்கிற ஒரு வகைக் கடற்பறவைகள் இரையளிப்பார்களோவென்று ஆசைகொண்டு அருகே வருகிற தருணம்பார்த்து அவற்றை வேட்டையாடுவதாம். நான் பார்த்துக் கொண்டேயிருக்கையில் வெகுசீக்கிரத்தில் முப்பதுதரம் சுட்டார்கள். அவைகளைக் கொன்றால், அவை உணவுக்காவது உபயோகப்படுமோவென்றால், உணவுக்கு உபயோகப்படுகின்றவையுமல்ல. சில தருணங்களில் அடிபட்ட அப்பறவைகள் நன்றாய் உயிர்போகாமல் குற்றுயிராயும் அப்படியே தண்ணீரில் வீழ்ந்துபோவதுண்டு. சிலவேளைகளில் அவர்கள், அப்பறவைகள் கூட்டமாய்க்கூடிக் கோலாகலமாயிருக்கையில் அவற்றைச் சுடுவார்கள்; அப்பொழுது அநேகம் பக்ஷிகள் இறந்துபோம், அநேகம் குற்றுயிராகத் துடிக்கும். இவர்கள் இக்கொடுமைசெய்யத் தலைப்பட்டதனால் இங்கிலாந்தைச் சேர்ந்த கடற்கரையின் அழகு வரவரக் குறைந்துபோகத் தலைப்பட்டிருக்கிறது. கண்ணுக்கினிய காட்சியளிக்கும் இந்த அழகான ஜீவன்களில் ஒழிந்தவைபோக மிகுந்துள்ளவைகளையாயினும் அழிக்காமலிருக்கும்படி இக்கொடிய கொலையாளிகளைத் தடுக்க ஒரு உபாயமுமில்லையோ? மிகவும் அழகாகிய கடற்கரைப் பறவைகளை இப்படி அநியாயமாய் அழிக்கப் புகுந்து கடைசியில் அவ்விடங்களைப் பக்ஷிகளேயில்லாமல் சூன்னியமாக்கிவிட்டால், பிறகு இந்த வேட்டைக்காரர்களே தமக்குப் பக்ஷிகளே யகப்படாமல் பிராணனை விடும்படியாகுமன்றோ? விவேகமில்லாமல் செய்யும் இக்கொடிய விளையாட்டினால் ஜீவஹிம்ஸையன்றி வேறு நன்மை யேதேனுமுண்டோ? இவர்கள் என்றைக்கேனும் ஜீவகாருணியமுடையவராவார்களோ? அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை யன்றோ?

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்."—குறள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1902.